


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற 7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 சென்னை பரிசளிப்பு விழாவில், ஆசிய ஆடவர் ஹாக்கி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு கோப்பையை வழங்கி, இந்திய அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்களை அணிவித்து, வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், ஒன்றிய தகவல் மற்றும் ஒளிரபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர். ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, பொதுச் செயலாளர். போலா நாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன், செயல் இயக்குநர் காமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவஸ்தவா, ஆசிய ஹாக்கி சம்மேளனத்தின் நிர்வாகி தைமூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆசிய ஆடவர் ஆக்கி கோப்பையை வென்ற

# இந்திய அணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.10 கோடி பரிசு!

## கோப்பையை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 14 -

"ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" பரிசளிப்பு விழாவில் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு வெற்றிக் கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

வழங்கி வாழ்த்தினார். தொடர்ந்து ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பையை வென்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.10 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும் என்று

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற 7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" பரிசளிப்பு விழாவில், ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்கள் முன்னிலையில் ஆசிய ஆடவர் ஹாக்கி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு கோப்பையை வழங்கி, இந்திய அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்களை அணிவித்து, வாழ்த்தினார். மேலும், வெற்றி பெற்ற இந்திய அணி வீரர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாயும், பயிற்சியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், என மொத்தம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" போட்டி ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை சென்னை, மேயர் இராதா கிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது. ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்திய இப்போட்டியில், இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்றன.

16 ஆண்டுகளுக்குப் பிறகு இப்புகழ்பெற்ற ஹாக்கிப் போட்டி சென்னையில் மீண்டும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில்,

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.7.2023 அன்று திறந்து வைத்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் 20.7.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" போட்டிக்கான கோப்பையை அறிமுகம் செய்து வைத்து, "பொம்மன்" இலச்சினையை வெளியிட்டார். மேலும், ஆசிய ஹாக்கி கோப்பையினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லும் "பாஸ் தி பால்" கோப்பை (PASS THE BALL TROPHY TOUR) சுற்றுப்பயணத்தையும் தொடங்கி வைத்தார்.

"பாஸ் தி பால் - கோப்பை" சுற்றுப்பயணம் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாக சென்று 1.8.2023 அன்று சென்னை வந்தடைந்தது. இந்த கோப்பையை சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம் அவர்கள் 2.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில், நடைபெற்ற "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023" இறுதிப் போட்டியில் இந்தியா - மலேசியா நாடுகளுக்கிடையேயான ஹாக்கி போட்டியை தொடங்கி வைத்து, இரு அணிகளின் தலைவர்கள், வீரர்கள் மற்றும் நடுவர்களை வாழ்த்தி, போட்டியினை பார்வையிட்டார்.

பின்னர், "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023" இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பெற்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெற்றிக் கோப்பையை வழங்கி, இந்திய அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்களை அணிவித்து வாழ்த்தினார்.

இந்த விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, பொதுச் செயலாளர் போலா நாத் சிங், பொருளாளர் சேகர்

ஜெ. மனோகரன், செயல் இயக்குநர் காமாண்டர் ஆர். கே. ஸ்ரீவஸ்தவா, ஆசிய ஹாக்கி சம்மேளனத்தின் நிர்வாகி தைமூர், சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூரில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு மற்றும் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ உள்ளிட்ட அரசு அதிகாரிகள் முன்னிலை வகித்தனர்.

### முதல்வரின் துரித செயல்பாடுகளால்

# தொழில்முதலீடு செய்வோருக்கான பணிகளை விரைந்து முடிக்கும் நாடுகளில் தமிழ்நாடு முதலிடம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

திருவாரூர்,ஆக. 14-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ,நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இன்று அனைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் சீரிய திட்டங்களான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், இவாடகை குறித்தும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு, தீனதயாள் உபாத்யா கிராமின் கௌசல்யா திட்டம், குடிநீர் விநியோகம், (ஊரகம்) உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறையின் சார்பில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம் குறித்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசின் இசேவை மையம்,

பள்ளி கல்வித்துறையின் எண்ணும், எழுத்தும் இயக்கம், பள்ளி உட்கட்டமைப்பு, அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், சிறப்பு திட்ட செயலாக்களான நான் முதல்வன் திட்டம், மாண்புமிகு முதல்வரின் சிறப்பு திட்டாக்கப் பணிகள் செயல்பாடுகள் குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப்பணிகள், அங்கான்வாடிகள், புதுமை பெண் திட்டம் குறித்தும், மருத்துவத்துறையின் மக்களை தேடி மருத்துவம் குறித்தும், முதல்வரின் முகவரி திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தென் மாவட்டங்களில் அதிகமாக தொழில்பேட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில்களை தொடங்கயுள்ளது. இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கும். குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் படி விரைவில் தொடங்கப்படும். தென்மாவட்டங்களில் அதிக தொழில் முதலீடுகள் கொண்டுவரப்படும்.

வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய வரும் நிறுவனங்கள் அதற்கான முதற்கட்ட அலுவல் பணிகள் முதல்வர் அவர்களின் துரித செயல்பாடுகளால் மற்ற நாடுகளைவிட மிக விரைவாக தமிழ்நாட்டில் நடைபெறுவதை கண்டு வியப்படைந்து நாங்கள் சொன்னதைவிட அதிக முதலீடுகளை தமிழ்நாட்டில் செய்திட விரும்புகிறோம் எனகூறுகின்றனர். இதுபோல விரைந்து செயல்படும் நாடாக தமிழ்நாடு இருப்பதாக குறிப்பிடுவது தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்பான ஆட்சிக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதேபோல் ஒடுக்கப்பட்ட மக்கள், விளிம்புநிலை மக்கள் , திருநங்கைகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் தொழில்துறையில் வாய்ப்பளிக்கும் மாநிலமாக நமது தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியா முழுவதும் உள்ள தொழில் நிருவனங்களில் பணிபுரிபவர்களில் நமது தமிழ்நாட்டை சேர்ந்தவர்களே அதிகம் என்கிற புள்ளிவிபரம் நமது தமிழ்நாட்டிற்கே பெருமையாகும்.

என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நகரமன்ற தலைவர்கள் மன்னை.சோழராஜன், புவனபிரியா செந்தில், நகரமன்ற உறுப்பினர்கள் வாரை எஸ்.பிரகாஷ்,டி. செந்தில் உள்ளிட்டவர்களும் அனைத்துதுறை உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நீட் தேர்வு குறித்து ஆளுநர் ரவி அவர்களின் கருத்துக்கு அமைச்சராக உங்கள் பார்வையை சொல்லுங்கள் என்னும் பத்திரிக்கையாளரின் கேள்விக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா பதில்

ஒரு அமைச்சராக மட்டுமல்லாமல் , நாட்டின் ஒரு பிரஜ்ஜையாக ,திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒரு தொண்டனாக ,நீட்டின் கொடுமைகளை அறிந்த ஒருவனாக சொல்கிறேன், "முதல்வர் அவர்கள் எதிர் கட்சியாக இருந்த போதும் சரி, ஆட்சிப்பொருப்பிற்கு வந்தபிறகும் சரி , நீட் தேர்வின் கொடுமைகளுக்கான சரியான காரணங்களை சொல்லி தெளிவாக எடுத்துரைத்த பிறகும் ஆளுநர் அவர்கள் இப்படி ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறார் என்றால் , ஆளுநர் தனது எல்லா நடவடிக்கைகளிலும் அரசியல் செய்வதைப்போல ஏழை எளிய நடுத்தர மாணவர்களின் கல்வியிலும் , மருத்துவ கனவிலும் அரசியல் செய்வது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது" . இவ்வாறு பதில் அளித்தார்.

### கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர்

# ந. ராமசாமி 88வது பிறந்தநாள் விழா!

பெங்களூரு, ஆக. 14 -

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.ராமசாமி 88வது பிறந்த நாள் விழா அவரது வீட்டில் எளிமையாக கொண்டாடப்படுகிறது. இவர் 1950 ஆம் ஆண்டு முதல் கர்நாடக மாநில தி.மு.க.வில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார். அதற்கு முன்பு பகுத்தறிவு மன்ற செயலாளராக இருந்தார். பேரறிஞர் அண்ணா காலத்தில் 1963 ஆம் ஆண்டு கர்நாடக மாநில திமுக துணை அமைப்பாளராக பதவி வகித்தார்.

தொடர்ந்து 60 ஆண்டுகளாக கர்நாடக மாநில தி.மு.க.வில் கொள்கை



பிடிப்புடன் கட்சி வளர்ச்சி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரை பெங்களூருவுக்கு வரவழைத்து பொதுக் கூட்டங்கள் நடத்தியவர்.

தளபதி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அன்பைப் பெற்றவர். இவர் கழகப் பணிகளோடு கடந்த 40 ஆண்டுகளாக தொழிற்சங்க வாதியாக தொழிலாளர்கள் தலைவராக செயல்பட்டு வருபவர். கர்நாடக மாநில தி.மு.க.வின் மூத்த முன்னோடி.

திராவிட கொள்கைகளில் மாறா பற்று கொண்டு தி.மு.க.வை உயிர் மூச்சாக நேசித்து வருபவர். இவரது பிறந்தநாளை முன்னிட்டு இன்று திமுக தலைவர்கள் தோழமைக் கட்சி தலைவர்கள் பொதுநல அமைப்புகள் தமிழ் அமைப்புகள் தொழிற்சங்க அமைப்புகள் இவருக்கு வாழ்த்து தெரிவிக்க உள்ளன. இவருக்கு 88 வயது ஆனாலும் 28 வயது இளைஞர் போல் சுறு சுறுப்பாக ஓடியாடி கழகப் பணிகளை தீவிரமாக ஆற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நாளை (15.08.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில், ஆடுதுறை ராயல் மஹாலில் நடைபெற உள்ளது.

அதுசமயம் அக்கூட்டத்தில் நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்கள். மாவட்ட கழக நிர்வாகிகள். தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், மாநகர பகுதி கழகக் செயலாளர்கள். மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள். மாநகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள். மாவட்ட சார்பு அணிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள். குறித்த நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்:

1. ஆகஸ்ட் 5 அன்று காணொளி காட்சி மூலம் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர் கூட்ட தீர்மானம்.

2.ஒன்றிய, பேரூர். பகுதி கழக சார்பு அணி நிர்வாகிகள் நியமனம் செய்தல் குறித்து.

3. செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் விழா. 4. கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் மழையின் காரணமாக ரத்து செய்யப்பட்ட 100கூட்டங்களை அண்ணா பிறந்தநாள் பொதுக்கூட்டத்துடன் இணைத்து நடத்துவது குறித்து.

5. கழக ஆக்கப்பணிகள்,

**சு.கல்யாணசுந்தரம் எம்.பி.,**
செயலாளர்
தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.

# தமிழ்நாடு வக்ஃப் வாரிய முத்தவல்லிகளுக்கான தேர்தல்!

சென்னை, ஆக.14-

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில் வாக்களிப்போருக்கான முத்தவல்லிகள் பிரிவிற்கு இறுதி வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டு, 14.08.2023 அன்று வெளியிடப்படுகிறது. இவ்வாக்காளர் பட்டியல், தேர்தல் அதிகாரி/ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை600 005, முதன்மைச் செயல் அலுவலர் அலுவலகம், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை-600 001, அனைத்து மண்டல வக்ஃப் கண்காணிப்பாளர்களின் அலுவலகங்கள் (11 மண்டலங்கள்) மற்றும் பிற்படுத்த ப்பட்டோர், மிகப்பிற்படு த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9ன் அதிகாரபூர்வ வலைதளம் ஆகியவற்றில் வெளியிடப்படுகிறது.

2. தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணை விரைவில் வெளியிடப்படும். தேர்தல் பற்றிய அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் தேர்தல் அதிகாரியால் வெளியிடப்படும்.

இவ்வாறு தேர்தல் அதிகாரி/ ஆணையர், மற்றும் சீர்மரபினர் நலத்துறை அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

"தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்" என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**